# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, FAST TRACK COURT, ARANI.
## S.C.No.89/2018

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.4** |
| **Name** | **:** | திரு.பன்னீர்செல்வம் |
| **Father's Name** | **:** | பெருமாள் |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

2,3 எதிரிகள் ஆஜர். 4ஆம் எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 1ம் எதிரி இறந்துவிட்டார்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.10.2023.**

முதல் விசாரணை -

நான் வடகல்பாக்கம் கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் தற்போது வேலைக்கு எதுவும் செல்லவில்லை. இறந்துபோன பிரேம்குமாரை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் தேதி மாதம் ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு என்ன தெரியும் என்றால் எதுவும் தெரியாது.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

13.2.2007அன்று எங்கள் ஊரில் மயான கொல்லை நடந்தது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அம்மன் ஊர்வலம் முடிந்து 5.30 மணிக்கு நான் வீட்டிற்கு சென்றேன் என்றால் சரி தான். அப்போது என்ன கேள்விப்பட்டேன் என்றால் யாரோ ஒரு நபர் இறந்துவிட்டதாக சொல்லி ஜனங்கள் ஓடியதால் நானும் போனேன். எங்கள் ஊரில் இருந்து சோதியம்பாக்கம் போகும் வழியில் ஒரு ஆண் பிரேதம் இருந்ததை நான் பார்த்தேன். ரத்தமாக இருந்தது. கத்தியால் வெட்டப்பட்டிருந்ததை நான் பார்க்கவில்லை. அந்த பிரேதம் யாருடையது என்று எனக்கு தெரியாது. சிப்பந்தி மணி மற்றும் என்னை காவல் போட்டுவிட்டு சென்றார்கள் என்றால் சரி தான். கிராம உதவியாளரும் தலைவரும் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்றார்கள் என்றால் சரி தான்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரி தான். அன்று திருவிழா நாள் என்பதால் சாமிக்கு ஆரத்தி கொடுக்க வீட்டில் இருந்தேன் என்றால் சரி தான். போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால் சரி தான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.